	280,501,828.00	**304,261,744**		**296,612,582**

கணக்காய்வாளரின் பரிந்துரையின் படி,வாகனம் பீடீ 9093 மற்றும் பீடீ 9084 தவிர மோட்டார் வாகனங்கள் மீள்பெறுமதியிடப்பட்டுள்ளது. தகைமைவாய்ந்த கணக்காளரின் மதிப்பீட்டின் படி மீள்மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 56,230,000.00 ஆகும்.

பெலிதெனிய காணி.1095 ஹெக். காணி மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சினால் 07/07/2017 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியால் மீள் உரித்தளிக்கப்பட்டது.

4. குத்தகைக் காணி (காணியைப் பயன்படுத்தும் உரிமை)

காணியைப் பயன்படுத்தும் உரிமைகுத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதிக்குச் சமனான தொகையில் அளவிடப்பட்டு ஆரம்பத்தில் ஏற்கப்பட்ட கூடுதல் முறைக் கடன் பெறு விகிதத்தைப் பயன்படுத்தி கழிவிடப்பட்டு குத்ததைக் காலத்திற்கு காலக்கழிவிடப்படுகின்றது.

	2018	2017
மூலதனமாக்கப்பட்ட தொகை		
சனவரி 01 இல் உள்ளவாறு	**70,909.00**	**70,909**
ஏற்கப்பட்ட ஆரம்ப கிரயம்	-	-
ஆண்டின் போது மூலதனமாக்கப்பட்டவை	-	-
திசெம்பர் 31 இல் உள்ளவாறானது	**70,909.00**	**70,909**
காலக்கழிவு		
சனவரி 01 இல் உள்ளவாறு	**49,638.60**	**47,275**
ஆண்டின் போது காலக்கழிவு	2,363.70	2,364
திசெம்பர் 31 இல் உள்ளவாறானது	**52,002.30**	**49,639**
கொண்டுசெல்லும் பெறுமதி	**18,906.70**	**21,270**

காணியின் குத்தகை உரிமை 30 ஆண்டுகளுக்காக 1997 நவம்பர் முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மாற்றற் காலப்பகுதியில் (2011 சனவரி 01) ஏற்பிசைவு செய்யப்பட்ட காணிப் பயன்பாட்டு உரிமை 2026 நவம்பர் வரையுள்ள குத்தகைக் காலப்பகுதிக்கு காலக்கழிவு செய்யப்பட்டிருந்தது.

5 அருவகச் சொத்துக்கள்

	2018 திசெம்பர் 01 இல் உள்ளவாறு	சேர்ப்பனவுகள்/ அகற்றல்கள்	2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது
5.1 கிரயத்தில்			
கணனி மென்பொருள்	2,677,306.12		2,677,306
மொத்தம்	**2,677,306.12**	-	**2,677,306**

	2018 திசெம்பர் 01 இல் உள்ளவாறு	ஆண்டிற்கான விதிப்பனவுகள்	2017 திசெம்பர் 01 இல் உள்ளவாறு
5.2 காலக்கழிவு			
கணனி மென்பொருள்	2,647,855.80	29,450.00	2,618,406
மொத்தம்	2,647,855.80	29,450.00	2,618,406

	2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு	2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு
5.3 தேறிய கொண்டுசெல்லும் பெறுமதி		
கணனி மென்பொருள்	**29,450.32**	**58,900.32**

6.	**பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் /(பொறுப்புகள்)**	**2018**	**2017**
	சனவரி 01 இல் உள்ளவாறான மீதி	(36,917,622.00)	**(28,620,113.00)**
	சீராக்கம்	(299,602.88)	(8,297,509.00)
	திசெம்பர் 31 இல் உள்ளவாறானது	**(37,217,224.88)**	**(36,917,622.00)**

			2018	**2017**
7	**ஏனைய சொத்துக்கள்**			
	பட்டை தீட்டப்படாத கற்களும் செயற்கைச் சேர்மக் கற்கள்		96,682.58	96,682.58
	கண்காட்சி இரத்தினக்கல்		371,842,648.00	371,842,648.00
	இரத்தினக்கற் முற்பணக் கொடுப்பனவு மற்றும் இரத்தினக்கல் நிறுவகம்		200,000.00	200,000.00
			372,139,330.58	**372,139,331.00**
	சேதங்களுக்கான ஏற்பாடு		(200,000.00)	(200,000.00)
			371,939,330.58	**371,939,331.00**
8	**விற்பனைக்காக உள்ளவை (AFS)**			
	பட்டியல் படுத்தப்படாத முதலீடுகள்	(குறிப்பு 8.1)	1,200,010	1,200,010.00
8.1	**பட்டியல் படுத்தப்படாத முதலீடுகள்**	***பங்குகளின் எண்ணிக்கை***		
	வரையறுக்கப்பட்ட அஸோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன்	20,000	200,000.00	200,000.00
	வரையறுக்கப்பட்ட ஜீ.எஸ்.எம்.பீ. டெக்னிகல் சேவிசஸ் (தனி)	100,000	1,000,000.00	1,000,000.00
	எல்ஜீஎல் (தனி) வரை.	1	10.00	10.00
			1,200,010.00	**1,200,010.00**
9	**இருப்புகள்**			
	நுகர்வுப் பொருட்கள் இருப்பு		1,032,275.48	1,594,393.79
	இரத்தினக்கற்கள் - கெவுடா நிலையம்		183,547.54	183,547.54
	அச்சிடலும் காகிதாதி இருப்பும்		1,530,035.14	1,460,054.68
			2,745,858.16	**3,237,996.01**

		2018	2017
10	**பெறவேண்டியவைகள்**		
	பெறவேண்டியவைகள்	63,364,424.33	60,224,000.78
	சேதங்களுக்கான ஏற்பாடு	(1,407,972.00)	(1,407,972.00)
		61,956,452.33	**58,816,028.78**
	ஏனையவைகள்	2,357,139.37	4,384,284.37
		64,313,591.70	**63,200,313.15**
11	**முதிர்வு வரையுள்ள முதலீடுகள் (எச்சீஎம்)**		
	காலக் கிரயத்திலுள்ள கொண்டுசெல்லும் தொகை		
	திறைசேரி உண்டியல்கள்	**800,188,693.02**	**567,554,782.56**
12	**வைப்புகளும் முற்பணங்களும்**		
	பொது வைப்புகள்	47,681,813.39	39,532,823.87
	ஏனையவை	14,525.00	14,525.00
	பாதுகாப்பு வைப்புகள்	59,500.00	161,000.00
	விநியோகத்தர்களின் முற்பணம்	3,000,000.00	1,791,841.15
		50,755,838.39	**41,500,190.02**
	சேதங்களுக்கான ஏற்பாடு	(1,433,947.00)	(1,433,947.00)
		49,321,891.39	**40,066,243.02**

		2018	2017
13	**ஊழியர் கடன்களும் முற்பணங்களும்**		
	முற்பணங்கள்	73,315.01	28,913.87
	கொடுப்பனவற்ற லீவுகள்	185,212.05	216,849.55
	வாகனக் கடன்	4,574.34	84,574.34
	கடன்கள்		
	புடவைக் கடன்	110,000.24	20,000.24
	இடர் கடன்கள்	12,918,234.72	12,337,770.56
	வெள்ளக் கடன்கள்	812,297.10	1,237,786.56
		14,103,633.46	**13,925,895.12**
14	**ஏனைய நிதிச் சொத்துக்கள்**		
	நிலையான வைப்புக்கள்	688,945,512.47	625,245,497.96
	அரச நிறுவகங்களின் தற்காலிக மிகை நிதியம்	19,159,068.92	18,047,982.05
		708,104,581.39	**643,293,480.01**
15	**காசும் காசுக்குச் சமமானவையும்**		
	ரிப்போக்களிலான முதலீடுகள்	27,560,000.00	-
	காசும் வங்கி மீதியும் - இல. ரூபா	27,839,294.56	73,330,334.38
	வங்கி மீதிகள் - வெளிநாட்டு நாணயம்	1,876,478.83	1,020,677.55
	சில்லறைக் காசு	-	-
	ரிப்போக்களிலான முதலீடுகள்	-	-
		57,275,773.39	**74,351,011.93**

16 பங்களிப்பு மூலதனம்

அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் செலவில் காணப்பட்டு அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட தொகையை உள்ளடக்கிய ஆரம்ப மூலதனத்தை மூலதனம் கொண்டுள்ளது.

17 இரத்தினக்கல் அகழ்வு நலன்புரி நிதியம்

1993 இன் 50 ஆம் இலக்க இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பகுதி I 14 (என்) இன் படி, இரத்தினக்கல் கைத்தொழிலில் தொழில் புரியும் ஊழியர்களை ஆபத்திலிருந்து காப்பாற்றும் படி குறிப்பிடப்பட்டுள்ளமையால் 2008 வரை இரத்தினக்கல் அகழ்வாளர்களிடமிருந்தும் நிதி சேகரிக்கப்பட்டிருந்தது.

18 ஆபரண அபிவிருத்தி நிதியம்

ஆபரணக் கைத்தொழிலில் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக 2007 பாதீட்டுப் பரிந்துரைப்பிற்கமைய ஆபரணத் தயாரிப்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்படும் ரூபா 5000 வருடாந்தப் பதிவுக் கட்டணத்தை இது குறிக்கின்றது.

19 இரத்தினக்கல் பரிசூதிய நிதியம்

1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல்,ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பகுதி IV 52 இன் தேவைப்பாட்டிற்கமைய தண்டப்பண நிதியத்திற்கு சட்ட மீறல்களுக்காக குறித்த தரப்பினரிடமிருந்து விதிக்கப்படும்தண்டப்பணத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. சபைச் சுற்றறிக்கை 824 இன் அறிவுறுத்தல்களுக்கமைய தண்டப்பணம் சுற்றிவளைப்புக் குழுவிற்கு வெகுமதிகளை வழங்குவதற்காக இந் நிதியம் பேணப்படுகின்றது.

20 இரத்தினக்கல் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்

கண்காட்சியில் பயன்படுத்தப்பட்ட இரத்தினக்கற்களின் மீள்மதிப்பீட்டு மிகையை இது பிரதிநிதித்துவம் செய்கின்றது.

21 மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்

காணி கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டு மிகையை இம் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் குறிக்கின்றது. குறித்த மீள்மதிப்பீட்டுச் சொத்துக்கள் கைதவிர்க்கப்படுகையில் மீள் மதிப்பீட்டு மிகையின் பகுதி பகிரப்படாத உழைப்பிற்கு மாற்றப்படுகின்றது.

22. ஓய்வூதிய நலக் கடப்பாடுகள்

	2018	2017
சனவரி 01 இல் உள்ளவாறான மீதி	32,437,373.55	34,742,935.55
விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட செலவினங்கள்	1,722,598.00	7,814,363.00
2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட நலன்கள்	(5,817,921.00)	(10,119,925.00)
2018 ஆம் ஆண்டிற்கான சீராக்கங்கள்	-	-
திசெம்பர் 31 இல் உள்ளவாறானது	28,342,050.55	32,437,373.55

22.1 விபரமானவருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட செலவினங்கள்

வட்டி கிரயம்	3,791,929.00	3,543,779.00
ஆண்டிற்கான கட்டணம்	1,395,142.00	1,733,592.00
எடுகோள்களின் மாற்றங்களிலிருந்து உருவாகும் (இலாபம்) / நட்டம்	(3,464,473.00)	2,536,992.00
	1,722,598.00	**7,814,363.00**

ஓய்வூதிய நலக்கடப்பாடுகளை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டமுகாமைத்துவத்தின் சிறந்த மதிப்பீட்டு மாறிகளை அடிப்படையாகக் கொண்டு இவ் எடுகோள்கள் அதிகாரசபையால் விஸ்தரிக்கப்பட்டவையாகும்.

பயன்படுத்தப்பட்ட முக்கிய எடுகோள்கள் பின்வருமாறாகும்.

கழிவு வீதம் [%]	12	10
எதிர்கால சம்பள உயர்வுகள் சராசரி – சம்பளம் [%]	1.3	1.3
பதவியணி புரள்வுக் காரணி [%]	0.4	1.5
ஓய்வு பெறும் வயது [ஆண்டுகள்]	60	60

நீண்ட தவணை அரசாங்க முறிகளின் சந்தை விகிதத்தின் அடிப்படையில் கழிவு வீதம் நிர்ணயிக்கப்படுகின்றது.

23 குத்தகைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் பொறுப்பு

மொத்தப் பொறுப்பு		
சனவரி 01 இல் உள்ளவாறு	**454,776.00**	**494,264.00**
ஆண்டின் போது இனங்காணப்பட்டவை	-	-
ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்	(39,487.00)	(39,488.00)
திசெம்பர் 31 இல் உள்ளவாறானது	**415,289.00**	**454,776.00**
நிதிக் கிரயம்		
சனவரி 01 இல் உள்ளவாறு	**446,359.00**	**484,386.00**
ஆண்டின் போது இனங்காணப்பட்டவை	-	-
ஆண்டின் போது பரந்த வருமானத்தில் இனங்காணப்பட்ட நிதிக் கிரயம்	(38,239.00)	(38,027.00)
எதிர்வரும் காலத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிக் கிரயம்	**408,120.00**	**446,359.00**
திசெம்பர் 31 இல் உள்ளவாறானது தேறிய பொறுப்பு	**(7,169.00)**	**(8,417.00)**

23.1 பொறுப்புகளின் வகைப்படுத்தல்

ஒரு வருடத்திற்குள் கொடுப்பனவிற்கான தீர்வுகள்		
மொத்தப் பொறுப்பு	40,157.00	40,158.00
எதிர்காலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிக் கிரயம்	(38,420.00)	(38,238.29)
	1,737.00	**1,920**
ஒரு வருடத்திற்கு மேல் கொடுப்பனவிற்கான தீர்வுகள்		
இரண்டு முதல் ஐந்து வருடத்திற்குட்பட்ட கொடுப்பனவிற்கான தீர்வுகள்		
மொத்தப் பொறுப்பு	197,438.00	177,694.00
எதிர்காலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிக் கிரயம்	(193,892.00)	(173,936.00)
	3,546.00	**3,758**

ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கொடுப்பனவிற்கான தீர்வுகள்		
மொத்தப் பொறுப்பு	177,693.00	236,925.00
எதிர்காலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிக் கிரயம்	(175,806.00)	(234,184.00)
	1,887.00	**2,741**
ஒரு வருடத்திற்கு மேல் கொடுப்பனவிற்கான மொத்த தீர்வுகள்	5,433.00	6,499
திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த தேறிய பொறுப்பு	**7,170.00**	**8,419**

24. செலுத்த வேண்டியவைகள்

கடன்கொடுத்தோர்	64,525,120,.34	66,532,345.03
ஓப்பந்தக்காரர்களிடமிருந்தான பிடிமானப்பணம்	11,780,517.03	5,815,796.34
40% எல்ஆர்சீ மற்றும் காணி உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய காணி ஏலவிற்பனையிலிருந்தான விற்பனை வருமானம் ஏனையவை	1,162,827.26	2,133,581.27
	77,468,464.63	**74,481,722.64**

25 பெறப்பட்ட வைப்புகளும் முற்பணங்களும்

முற்பணப் பற்றுச்சீட்டுக்கள்	15,579,328,80	8,670,400.00
ஊழியர்களின் பிணை வைப்புகள்	61,500.00	49,500.00
நுகர்வோரிடமிருந்தான முற்பணம்	15,896.26	15,896.26
ஊழியர்களிடமிருந்தான மிகை அறவீடுகள்	8,872.92	1,250.00
காணிப் பிணக்கு வைப்புகள்	78,151,108.41	66,465,090.70
கேள்வி வைப்புகள்	8,875,700.00	8,165,500.00
உலக வர்த்தக மையத்திலுள்ள கடை உரித்திற்கான வைப்பு	32,737,771.02	19,185,291.07
இரத்தினக்கல் நூதனசாலை நிதியம்	125,997.00	125,997.00
ஏற்றுமதி தரகு வைப்புகள்	280,000.00	280,000.00
	135,836,174.41	**102,958,925.03**

26	**செலுத்த வேண்டிய நியதிச் சட்டக் கொடுப்பனவுகள்**			
	கூட்டிணைந்த வரி	(குறிப்பு 26.1)	22,361,874.12	24,732,960.86
	பெறுமதி சேர் வரி		1,020,703.16	9,978,712.84
	பிடித்து வைத்தல் வரி		30,085.27	7,000.00
	2.5% பிடித்துவைத்த இரத்தினக்கல் ஏலவிற்பனை வரி		162,991,516.32	115,618,538.35
	பொருளாதார சேவை வரி		-	-
	தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி		(2,131.58)	1,853,811.69
	முத்திரைக் கட்டணங்கள்		455,427.82	1,945,252.43
	உழைக்கும் போதே செலுத்தும் வரி		94,867.00	(364,185.33)
			186,952,342.11	**153,772,090.84**
	26.1 கூட்டிணைந்த வரி			
	சனவரி 01 இல் உள்ளவாறான மீதி		19,017,039.14	32,111,087.13
	ஆண்டிற்கான நடைமுறை வரி		54,463,728.23	7,211,837.96
	ஆண்டின் போதான கொடுப்பனவு- கடந்த ஆண்டுப் பொறுப்பின் தீர்ப்பனவு			
	- சுய மதிப்பீட்டுக் கொடுப்பனவு		-	(1,000,000.00)
	வரிக்கடன்களுடன் பதிவழிக்கப்பட்டவை - ஈஎஸ்சீ		-	(2,385,319.00)
	- பிடித்து வைத்தல் வரி		(2,158,668.11)	-
	- பெயரளவு வரி		(759,750.00)	-
	கடந்த ஆண்டின் (குறை)/ மிகை ஏற்பாட்டின் சீராக்கம்		(48,200,475.14)	(16,920,566.95)
	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி		**(22,361,874.12)**	**19,017,039.14**
27	**ஏற்பாடுகளும் அட்டுறு செலவினங்களும்**			
	அட்டுறு செலவினங்கள்		80,584,482.86	61,285,780.22
			80,584,482.86	**61,285,780.22**

28 வருமானம்

	2018	2017
காணி ஏலவிற்பனை – அரச காணி	24,570,634.88	15,318,280.05
காணி ஏலவிற்பனை – எல்ஆர்சீ	15,966,092.43	8,959,330.71
சேவை மற்றும் மேன்முறையீட்டு அனுமதிப்பத்திரக் கட்டணம்	1,233,944.00	1,230,625.11
இரத்தினக் கல் அகழ்வு அனுமதிப்பத்திரக் கட்டணம்	34,836,829.35	30,626,717.64
விற்பனையாளர் அனுமதிப்பத்திரக் கட்டணம்	49,161,290.74	47,430,740.23
அன்பளிப்புகள் மற்றும் மாதிரிகளுக்கான சேவைக் கட்டணம்	364,000.00	500,550.00
இரத்தினக்கல் ஆபரண ஏற்றுமதி சேவைக் கட்டணம்	134,417,091.77	133,279,740.77
பட்டை தீட்டல் அனுமதிப்பத்திரக் கட்டணம்	365,550.00	283,037.06
சேவை கட்டணங்கள் - கெவுடா ஏற்றுமதி	3,981,642.19	8,519,859.68
எல்டீஓ காணி / கனியவள வரி	4,305,544.00	3,664,500.00
தண்டப் பணத்திலிருந்தான வருமானம்	17,323,474.67	28,992,516.41
இரத்தினக் கல் ஏலவிற்பனை உரிமை ஆவணம்	1,024,800.00	935,700.00
இரத்தினக் கல் பரிசோதனைக் கட்டணம்	10,550,540.81	7,357,114.88
மதிப்பீட்டு அலுவலகத்திலிருந்தான வருமானம்	26,893,935.50	8,520,024.27
அனுமதிப்பத்திரப் பிரதிக் கட்டணம்	145,281.60	161,178.90
சேவைக் கட்டணம் - கட்டுநாயக்க வைர நிலையம்	6,308,034.65	4,565,852.79
இரத்தினக்கல் பொதி அகற்றலிலிருந்தான வருமானம்	1,073,000.00	1,269,250.00
சுற்றாடல் பாதுகாப்பு	565,000.00	600,000.00
பெக்கோ சேவைக் கட்டணம்	14,791,599.98	3,637,197.46
பரிசோதிப்புக் கட்டணம்	20,643,208.18	7,190,363.64
நிற மற்றும் 3 டீ அட்டைகள்	2,850,780.00	2,718,105.00
இரத்தினக் கல் விற்பனை	25,929,373.02	126,781,569.62
இரத்தினக்கல் அகழ்வு விற்பனை	5,577,000.00	6,795,200.00
கிரவல் கொண்டுசெல்வதற்கான அனுமதி வருமானம்	1,324,600.00	3,300,000.00
	404,203,247.77	**452,637,454.22**

29 ஏனைய வருமானம்	2018	2017
நானாவித வருமானம்	1,108,598.12	744,092.48
உ.வ.மைய மற்றும் இரத்தினபுரி விற்பனைக் கூடங்கள்	36,076,531.98	29,883,775.94
புத்தக விற்பனைகள்	14,400.00	12,300.00
பங்கிலாபங்கள்	1,991,086.87	1,294,649.73
வாடகை வருமானம்	1,771,737.69	1,713,271.06
ஏலவிற்பனைப் பொருட்களிலிருந்தான வருமானம்	2,669,900.00	-
நிலையான சொத்துக் கைதவிர்ப்பிவிருந்தான இலாபம்	78,100.00	42,569.15
காப்புறுதி முகவர்களிடமிருந்தான வருமானம்	305,428.68	299,219.66
ஆபரண விற்பனை	-	796,945.00
கண்காட்சிச் செலவினங்கள் - வெளிநாடு (அறவிடப்பட்டது)	12,113,911.70	47,924,168.05
	56,129,695.04	**82,710,991.07**

30 நிர்வாகச் செலவினங்கள்	2018	2017
சந்தாக்கட்டணம்	1,013,470.27	596,493.60
உபசாரிப்பு (உள்ளூர்)	1,762,153.58	582,811.66
தொலைபேசிக் கட்டணங்கள்	4,817,419.25	5,380,750.69
அஞ்சல் மற்றும் முத்திரைகள்	974,344.39	1,921,342.08
இணையதளக் கட்டணங்கள்	2,758,814.96	2,770,641.71
டெலெக்ஸ் மற்றும் பக்ஸ் கட்டணங்கள்	870.00	1,435.10
சபை அங்கத்தவர்களின் செலவினங்கள்	1,138,000.00	995,000.00
வாடகை	14,157,212.08	14,680,017.71
மின்சாரம்	9,222,871.97	10,704,102.46
இறைகளும் வரிகளும்	1,565,405.68	1,411,126.75
பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள்	215,860.00	199,639.00
நீர் வரி மற்றும் கட்டணங்கள்	1,339,817.68	1,426,649.45
விளம்பரம்	1,492,465.00	883,427.50
போக்குவரத்து	405,954.84	848,389.34
காப்புறுதி	1,675,310.47	1,712,729.14
சட்டக் கட்டணங்கள்	859,114.21	1,212,845.72
ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணங்கள்	900,000.00	600,000.00
அளவைக் கட்டணங்கள்	112,444.43	672,580.00
முகாமைத்துவ ஆலோசனை	491,250.00	43,700.00
கட்டிடப் பராமரிப்பு	6,670,667.89	8,861,304.47
உபகரணப் பராமரிப்பு	3,280,734.48	4,233,142.66
பாதுகாப்புச் சேவைகள்	8,385,000.00	8,945,750.00
கருத்தரங்குகளும் பயிற்சியும்(உள்ளூர்)	1,104,765.95	2,814,294.82
கருத்தரங்குகளும் பயிற்சியும் (வெளியூர்)	-	1,625,485.11
திடீர் சுற்றிவளைப்புச் செலவினங்கள்	620,433.00	603,800.02
பொது ஏலவிற்பனைச் செலவினங்கள்	343,850.00	837,026.46
அன்பளிப்புகள்	554,000.00	601,785.00
நுகர்வுச் சொத்துக்கள்	58,839.00	267,642.36
அலுவலக வழங்கல்கள்	2,921,204.39	3,959,437.40
காணிப் பயன்பாட்டு உரிமையின் காலக்கழிவு	2,364.00	2,364.00

அச்சீடு மற்றும் காகிதாதிகள்	2,451,407.43	4,471,512.10
ஆய்வுகூட வழங்கல்கள்	779,469.00	593,790.60
சுற்றாடற் செலவினங்கள்	1,581,894.00	1,035,408.00
பெறுமானத்தேய்வு	32,257,404.00	32,717,906.18
அருவகச் சொத்துக்களின் காலக்கழிவு	29,450.00	29,450.00
உலக வர்த்தக மையத்தின் வாடகை	28,434,675.00	24,932,088.59
உ.வ. மையத்திற்குச் செலுத்தப்பட்ட மின்சாரம்	1,198,102.68	1,209,216.60
மோட்டார் வாகனப் பராமரிப்பு	6,157,461.50	6,613,711.53
எண்ணெயும் எரிபொருளும்	7,059,695.04	5,607,083.40
டயர்களும் டியூப்களும்	1,153,964.90	1,201,377.53
மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமும் காப்புறுதியும்	1,283,468.07	724,642.64
வாகனத்தரிப்புக் கட்டணங்கள்	600.00	200.00
பொதுச் செலவினங்கள்	632,011.50	422,018.60
செயற்திட்டச் செலவினங்கள்	10,137,203.48	23,387,757.77
வங்கிக் கட்டணங்கள்	330,391.49	419,595.65
கோரப்படாத தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி	1,406,595.33	1,171,438.15
இரத்தினக்கல் சுரங்கவியலாளர்களின் புலமைப்பரிசுச் செலவினங்கள்	1,986,000.00	2,182,500.00
இரத்தினக்கல் காணிப் புனரமைப்பு	13,402,700.00	11,754,025.00
	179,127,130.94	**197,869,436.55**

		2018	**2017**
31	**ஆளணிச் செலவுகள்**		
	சம்பளங்களும் படிப்பணமும்	117,344,761.13	107,327,141.43
	பதில் படிப்பணங்கள்/ இடர் படிப்பணங்கள்	193,881.33	22,638.73
	ஊ.சே.நி. இற்கு உள்ளடங்காத சம்பளங்கள்	13,982,664.21	21,183,370.26
	ஊழியர் சேமலாப நிதியம்	18,806,231.49	16,855,920.21
	ஊழியர் நம்பிக்கை நிதியம்	3,761,244.82	3,371,183.91
	மேலதிக நேரக் கொடுப்பனவு	4,715,875.07	3,257,485.92
	லீவு நாட்களில் வேலை செய்தமைக்கான கொடுப்பனவு	32,441.25	348,426.60
	அன்பளிப்புகள்	131,100.00	-
	லீவு ஊக்குவிப்புக் கொடுப்பனவு	8,639,499.17	5,501,379.25
	ஊழியர் வீடமைப்புக் கடன்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி	237,984.06	355,802.04
	ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்	18,087,612.57	30,885,760.07
	பணிக்கொடை	1,722,598.00	7,814,363.00
	போக்குவரத்து (உள்ளூர்)	2,593,747.09	2,019,487.61
	பதவியணியினருக்கான சீருடை	984,159.69	71,558.75
	பதவியணி நலன்புரி	14,130,235.23	13,883,302.58
	ஊழியர் நட்டஈடு	(1,700,000.00)	4,185,974.43
	மருத்துவக் கட்டணங்கள்	12,598,582.43	12,069,107.71
	போக்குவரத்துப் படிப்பணம்	13,887,500.00	8,457,000.00
		230,150,117.54	**237,609,902.50**

		2018	2017
32	**ஊக்குவிப்புச் செலவுகள்**		
	பயணம் - வெளிநாடுகள்	429,100.00	6,067,092.00
	கண்காட்சிச் செலவினங்கள் - உள்ளூர்	6,899,656.16	8,677,396.85
	கண்காட்சிச் செலவினங்கள் - வெளிநாடுகள்	19,038,563.23	75,348,513.00
	விளம்பரப்படுத்தல் - உள்ளூர்	3,914,776.00	10,453,394.05
	விளம்பரப்படுத்தல் - வெளிநாடுகள்	550,004.26	946,520.72
	ஏனையவை	1,941,846.53	-
		32,773,946.18	**101,492,916.62**
33	**தேறிய நிதி வருமானம்**		
	வட்டி வருமானம்		
	நிலையான வைப்புகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி	127,860,412.91	130,071,667.99
	பதவியணி கடன் மீதான வட்டி	453,798.22	437,521.24
		128,314,211.13	**130,509,189.23**
	வட்டிச் செலவினங்கள்		
	குத்தகைக் கொடுப்பனவு மேற்கொள்வதற்கான பொறுப்பு மீதான நிதிக் கிரயம்	(38,239.00)	(38,027.00)
	வட்டிச் செலவினங்கள்	(38,239.00)	(38,027.00)
		128,275,972.13	**130,471,162.23**
34	**வருமான வரிச் செலவினங்கள்** **(குறிப்பு34.1)**		
	நடைமுறை வரிச் செலவினங்கள்	54,463,728.23	7,211,837.96
	கடந்த ஆண்டின் (குறை)/ மிகை ஏற்பாட்டுச் சீராக்கம்	-	-
	பிற்போட்ட வரிக் கட்டணம் /(மீட்பு) **(குறிப்பு 6)**	299,602.88	8,297,509.00
		54,763,331.11	**15,509,346.96**

34.1 உற்பத்திப் பொருளின் கணக்கீட்டு இலாபத்தினதும் நடைமுறை வரிச் செலவினத்திற்கும் இடையிலான கணக்கிணக்கம்

வரிக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம்	**121,557,720**	**128,847,352.00**
ஒட்டுமொத்த அனுமதியற்ற விடயங்கள்	65,125,775	147,105,672.00
ஒட்டுமொத்த அனுமதியான விடயங்கள்	(32,698,962)	(70,182,825.00)
ஏனைய வளங்களிலிருந்தான வருமானம்	(179,231,668)	(163,443,454.00)
வியாபார மற்றும் வர்த்தகத்திலிருந்தான இலாபம் / (நட்டம்)	**(25,247,135)**	**42,326,745.00**
வரிக்கு உட்பட்ட ஏனைய வருமானம்- வட்டி வருமானம்	178,293,568	162,106,236

மொத்த நியதிச்சட்ட வருமானம்	**178,293,568**	**204,432,981**
விதிப்பனவுகளுக்கு உட்பட்ட கொடுப்பனவு	(29,490,077)	(204,432,981)
பயன்படுத்தப்பட்ட வரி இழப்புகள்	(34,163,976)	-
மதிப்பிடப்பட்ட வருமானம் / வரி வருமானம்	**114,639,515**	-
நியதிச்சட்ட வரி விகிம் 28% படி விதிக்கப்பட்ட வரி	32,099,064	-
மொத்த பங்கிலாபத்தின் மீதான வரி	22,364,664	7,211,838
ஆண்டிற்கான வழமையான நடவடிக்கைகள் மீதான நடைமுறை வரி	**54,463,728**	**7,211,838**

35. மூலதன மற்றும் ஏனைய கடப்பாடுகள்

அறிக்கையிடற் காலப்பகுதியின் இறுதியில் சபைப் பணிப்பாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட பொருண்மையான மூலதனச் செலவினங்களோ அல்லது ஏனைய நிதிக் கடப்பாடுகளோ இருக்கவில்லை.

எஹலியகொட கட்டிட நிர்மாணிப்பு அபிவிருத்தியின்கணனி மென்பொருள் பொதி தொடர்பான இடைக்காலக் கொடுப்பனவுகளுக்காக நடைபெறும் வேலை மீதான செலவினத் தொகையாக ரூபா 5.7 மில்லியன் மேற்கொள்ளப்பட்டிருந்தது இது50% வேலை முடிவுறாது சான்றுறுதிப்படுத்தப்பட்டதாக முற்கொடுப்பனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.

36. அறிக்கையிடற் திகதிக்குப் பின்னர் நிகழும் சம்பவங்கள்

திசெம்பர் 31 ஆம் திகதியான அறிக்கையிடற் திகதிக்கும் அங்கீகரிக்கப்பட்ட திகதிக்கும் இடையே இந் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய அல்லது சீராக்கங்கள் தேவையான சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை.

37. நிகழத்தக்க பொறுப்புகள்

வழமையான வியாபார நடவடிக்கையின் போது எழும் சட்டக் கோரல்கள் தொடர்பாக அதிகாரசபை நிகழத்தக்க பொறுப்புகளைக் கொண்டுள்ளது.ஓர் ஏற்பாடாக ஏற்பிசைவு செய்யப்பட்டாலன்றி (குறிப்பு 27),இக் கோரல்கள் நடுநிலைத்தன்மையற்றவையெனவும் அவற்றின் தீர்ப்பனவிற்காக வளங்களின் வெளிப்பாய்ச்சல் பின்தங்கியதாகவுமே முகாமைத்துவம் கருதியுள்ளது. இம் மதிப்பீடானது அதிகாரசபையின் நீதிப் பிரிவின் ஆலோசனையுடன் இணங்குவதாகும்.

38. தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்கள்

அதிகாரசபையின் தொடர்புடைய தரப்பினரில் இலங்கை திறைசேரி, அரச சார்பான நிறுவனங்கள், அரசுடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகள் மற்றும் முக்கிய முகாமைத்துவ தரப்பினர் உள்ளடங்குவர்.

லங்காஜெமோலொஜிகல் லபோரட்டரி (பிரைவேட்) லிமிடட் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 126,512,567 தொகை மற்றும் இரத்தினக்கல் ஆபரண ஏற்றுமதியிலிருந்து சேகரிக்கப்பட்ட நிதியங்களில் இருந்தும் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண நிறுவகத்தால் ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

38.1 முக்கிய முகாமைத்துவ நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் LKAS.24 "தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களின" படி தொடர்புடைய தரப்பினரின் முக்கிய முகாமைத்துவ நபர்கள் நிறுவனத்தின் நடவடிக்கைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ திட்டமிடல், வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளிற்குப்

பொறுப்புடையவர்களாவர். இதன் படி, பணிப்பாளர் சபை முக்கிய முகாமைத்துவ நபர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

முக்கிய முகாமைத்துவ நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறாகும்.

	2018	**2017**
ஊதியமும் ஏனைய குறுங்கால ஊழியர் நலன்களும்	1,395,142.00	1,250,000
பின் உழைப்பு நலன்கள்	-	-

38.2 தொடர்புடைய தரப்பினரின்கொடுக்கல் வாங்கல்கள்

அதிகாரசபை மேற்கொள்ளும் முக்கியமான தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களின் விபரம் பின்வருமாறாகும்.

தொடர்புடைய தரப்பினர்	**அறிக்கையிடற் காலப்பகுதிக்கான கொடுக்கல் வாங்கல்களின் தன்மை**	**கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி**	**மீதி முதிர்வு வரை/ (முதிர்விலிருந்து)**
அரசுடமையாக்கப் பட்ட நிறுவனங்கள்	நிலையான வைப்புக்களில் மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடுகள்	316,637,270.80	
	நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களிலிருந்தான மீளப் பெறல்கள்	21,000,000.00	1,489,134,205
	ரீப்போ முதலீடுகள்	25,000,000	-
	ரீப்போக்களின் மீளப் பெறல்கள்	-	25,000,000
ஏனைய அரச சார்பு நிறுவனங்கள்	பங்கு முதலீடுகள்	-	-

39. முன்னைய ஆண்டு சீராக்கம்

2016/2017 ஆம் ஆண்டின் உழைக்கும் போதே செலுத்தும் வரிமற்றும் கூட்டமைப்பு வரியின் மிகை ஏற்பாட்டுக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய மீதியைப் பதிவு செய்வதற்காக முன்னைய ஆண்டு சீராக்கம் மேற்கொள்ளப்பட்டது.

தலைவர்

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு உரித்தான குறிப்புகள்,முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 48,200,475 தொகையான வருமான வரி மிகை ஏற்பாட்டுத் தொகை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் 36 ஆம் பந்தி மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 80(ஆ) பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் வரிச் செலவினத்திற்குச் சீராக்கப்படுவதற்குப் பதிலாக முன்னைய ஆண்டுச் சீராக்கமாகக் காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வரிக்குப் பின்னரான இலாபம் அத் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இற்கு முரணாக, காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாட்டின் கீழ் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டியவட்டி வருமானப் பெறுவனவு ரூபா 3,884,687 குறைவாகவும் நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்களின் மீளப்பெறல்கள் மற்றும் மீள் முதலீடுகளின் காசு வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் உட்பாய்ச்சல்களுக்கிடையேயான வேறுபாட்டுத் தொகையான ரூபா 295,637,270 தேறிய மீதி முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசுச் சீராக்கமாகக் காண்பிக்கப்பட வேண்டிய நடைமுறை வேலை ரூபா 61,890,191 ஆகவும், இடர் கடன் வழங்கல் ரூபா 7,832,590 ஆகவும், காசு உட்பாய்ச்சலாகக் காண்பிக்கப்பட வேண்டிய இடர் கடன் மீள் அறவீடுகளான ரூபா 5,044,506 தொகையும், ஆதன, இயந்திர உபகரணங்கள் மற்றும் ஊழியர்களிடம் இருந்து கிடைக்கவேண்டிய மீதிகளுடன் சேர்த்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் சொத்துக்களின் ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிராததன் காரணமாக ரூபா 103,032,087 கிரயமான முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட 26 மோட்டார் வாகனங்கள் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இதன் படி, கணக்கீட்டு மதிப்பீடுகளில் நிலவும் இடர்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் படி, மீள்பெறுமதியிடப்பட்டு நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதிகாரசபையின் கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம், ஒவ்வொரு வருடமும் ஆதன, இயந்திர உபகரணங்கள் மற்றும் அருவகச் சொத்துக்களில் முன்கொண்டு செல்லப்பட வேண்டிய பெறுமதி மீளாய்வு செய்யப்பட்டு கணக்குகளிற்குச் சீராக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மீளாய்வு செய்யப்படாது ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கிடைக்க வேண்டிய மீதி, வைப்புகள் மற்றும் முற்பணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களிற்காக ரூபா 5,976,657 கூட்டுத்தொகையான சேதமான நட்டத்திற்காகச் சீராக்கப்பட்டிருந்தது.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இற்கு முரணாக,நிகழத்தக்க பொறுப்புகளிற்காக உண்மையான மதிப்பீட்டை நிச்சயமாக இனங்காணாதுஊழியர் நட்டஈடாக ரூபா 5,800,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 2018 ஏப்ரல் 01 ஆம் திகதியின் பின்னர் உரித்தற்ற, 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் பிரகாரம்,ரூபா 22,364,664 தொகையான மிகையான வரிச் செலவினம் வருமான வரிச் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக அதே தொகையால் இலாபம் குறைவாகவும் வரிப் பொறுப்பு அதிகமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) (i) ஓய்வினை விடுமுறையைப் பெற்று பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரான அதிகாரசபையின் தலைவர் பல்கலைக்கழகத்தில் இருந்து முழுமையான சம்பளம்

மற்றும் கொடுப்பனவைப் பெற்றுள்ளதுடன் அதிகாரசபையிடம் இருந்தும் முழுமையான சம்பளத்தையும் படிப்பணத்தையும் பெற்றுள்ளார்.

(ii) தலைவருக்கு நிறுவகத்தின் தலைவராக உள்ளமைக்காக 2017 யூன் 17 ஆம் திகதிய அரச முயற்சிகள் சுற்றறிக்கை இல. 03/2015 இன் பிரகாரம் ரூபா 100,000 தொகையான மாதாந்தக் கொடுப்பனவும் 2015 மே 25 ஆம் திகதிய 1/2015 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 19,890 தொகையான எரிபொருட் கொடுப்பனவும் மாத்திரமே உரித்தானதாகும். இதன் படி, 2017 திசெம்பர் முதல் 2018 ஏப்ரல் வரை ரூபா 542,657 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றிஅதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து

செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம்பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இவ் அறிக்கையின் 1.2 (இ) மற்றும் (ஈ) அவதானிப்புகள் தவிர்ந்த முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே அதிகாரசபையினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் அதிகாரசபையின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வழமையான வியாபார நிலைமைக்கு அப்பால் தொடர்பு உள்ளதாகவும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் அதிகாரசபைஇணங்கியொழுகாது செயற்பட்டுள்ளமை.

சட்டங்கள், விதிகள் / ஏற்பாடுகளுடனான தொடர்பு

(அ)	1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டம்		
	(i)	15(1) ஆம் பிரிவு	இரத்தினக்கல் கைத்தொழிலை மேற்கொள்வதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்கும் அதிகாரியான அதிகாரசபையால் எந்த வித அனுமதிப்பத்திரமும் இன்றி இரத்தினக்கல் அகழ்வுச் செயற்திட்டம் 3 செயற்படுத்தப்பட்டிருந்தது.
	(ii)	15 (2) ஆம் பிரிவு	இரத்தினக்கல் பரீட்சித்தல் மற்றும் உறுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்காக செயற்படும் தனியார் ஆய்வுகூடங்களை பதிவு செய்வதற்காக ஒழுங்கமைப்பதற்காக நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை		
	(i)	6.5.1 ஆம் பந்தி	ஆதிகாரசபையின் 2018 ஆம் ஆண்டின் நிதி அறிக்கை கணக்காய்விற்கு 2019 மார்ச் 26 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.
	(ii)	6.5.3 ஆம் பந்தி	2016, 2017 ஆம் ஆண்டுகளின் வருடாந்த அறிக்கை கணக்காய்வுத் தினமாகிய 2019 மே 15 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ)	2015 மே 25 ஆம் திகதிய இல. பீஈடீ 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை		
	(i)	2 ஆம் பந்தி	தலைவருக்கு உத்தியோகபூர்வ வாகனம் ஒன்றை வழங்குவதற்குப் பதிலாக தலைவரின் தனியார் வாகனம் ஒன்றை உத்தியோகபூர்வ நடவடிக்கைகளிற்காகப் பயன்படுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தில் ஒரு மாதத்திற்கு ரூபா 200,000 படி 2018 மே மாதம் முதல் 08 மாதங்களுக்காக ரூபா 1,600,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக அதிகாரசபையின் குழாம் வாகனம் ஒன்றும் தலைவரின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு 2018 யூன் முதல் திசெம்பர் வரை கி.மீ. 12,838 ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவ் ஓட்ட அட்டவணைகளில் பயன்படுத்திய உத்தியோகத்தர் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.
	(ii)	3.2 ஆம் பந்தி	தலைவருக்கு 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதி முதல் 4 மாதகாலத்தில் விநியோகிக்கப்பட்ட மிகையான எரிபொருளிற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் இன்றி ரூபா 256,857 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய உத்தியோகத்தர்களுக்காக ஆண்டின் போது 22 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட மிகையான எரிபொருளிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி ரூபா 241,409 தொகை செலுத்தப்பட்டிருந்தது.
(ஈ)	முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2013 நவம்பர் 01 ஆம் திகதிய டீஎம்எஸ்/பொலிசி/03 ஆம் இலக்க கடிதம்		அங்கீகரிக்கப்பட்ட 32 பதவிகளுக்காக புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.
(உ)	முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2017 திசெம்பர் 26 ஆம் திகதிய டீஎம்எஸ்/1629/Volll ஆம் இல கடிதம்		அமைய துறை உதவியாளர்களை நிரந்தரமாக்குவகை திறைசேரி நிராகரித்திருந்த போதிலும், செயற்பாட்டு நிலையில் இல்லாத இரத்தினக்கல் அகழ்வு செயற்திட்டங்களுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த அமைய துறை உதவியாளர்கள் 15 பேர் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் அதிகாரத்தையும், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியிருந்தமை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் படிபின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த அதிகாரசபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமை.

  (அ) கொள்வனவுத் திட்டம் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 4.2 இற்கும் பாதீட்டிற்கு இணங்கவும் தயாரிக்கப்பட்டிராததுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

  (ஆ) 2018 கொள்வனவுத் திட்டத்தின் படி, மேற்கொள்ளப்பட வேண்டியதலைமை அலுவலகத்திற்காக ஓர் கட்டிடம் நிர்மாணித்தல், கதிர்காமம் விடுமுறை விடுதி நிர்மாணித்தல் மற்றும் சர்வதேச நிலையில் இரத்தினக்கல் மற்றும் ஆய்வுகூடமொன்றை நிர்மாணிக்கப்படுவதற்கு தேவையான உபகரணத்தைக் கொள்வனவு செய்தல் போன்ற செயற்பாடுகளுக்காக முறையே ரூபா 640 மில்லியன் தொகையும் ரூபா 35 மில்லியன் தொகையும் ரூபா 150 மில்லியன் தொகையும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இதற்கு உரித்தான எச் செயற்பாடும் கணக்காய்வுத் தினம் வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இரத்தினபுரி தெமுவாவக மனிக் வீதியை சர்வதேச இரத்தினக்கல் நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 100 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த காணி கையேற்கப்படுவது பூர்த்திசெய்யப்பட்டு திட்டமிடப்பட்டவாறு செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

  (இ) இரத்தினக்கல் அகழ்வுச் செயற்திட்டத்திற்காக கொள்வனவு நடைமுறை வழிகாட்டலின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக்கொள்ளாது, ஹந்துவவத்த மற்றும் பகவந்தலாவ செயற்திட்டத்திற்காக வேறு நிறுவகம் ஒன்றிடம் இருந்து பாதுகாப்புச் சேவை பெறப்பட்டு முறையே 8 மாதங்களுக்காக ரூபா 3,526,038 தொகையும் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது 16 மாதங்களுக்காக ரூபா 1,375,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

  (ஈ) 2018 செப்தெம்பர் 10 ஆம் திகதி பூர்த்திசெய்யப்படுவதற்கிருந்த எஹலியகொட அலுவலகக் கட்டிடத்தின் நிர்மாணிப்புப் பணிகள் கணக்காய்வுத் தினமாகிய 2019 மே 15 ஆம் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் நிர்மாணிப்புக் காலப்பகுதி பல்வேறு காரணங்களால் 4 ½ மாதங்களால் தாமதிக்கப்பட்டிருந்ததுடன் எந்த வித காரணங்களோ அல்லது அங்கீகாரம் இன்றி 4 மாதங்களால் நீடிக்கப்பட்டிருந்தது.

(உ) அதிகாரசபையால் இரத்தினக்கல் அகழ்வுச் செயற்திட்டம் மற்றும் விசேட செயற்திட்டத்தைச் செயற்படுத்துகையிலும் அதிகாரச்சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரமும் இரத்தின்கற்கள், படிவங்கள் மற்றும் இரத்தினக்கல் காணிகள் ஏலவிற்பனை மேற்கொள்ளப்படுகையில் கொள்வனவு நடைமுறை வழிகாட்டலின் படி, நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இதற்காக வேறு நடைமுறை வழிகாட்டலேனும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) வெற்றிடங்கள் நிலவிய 04 நிறைவேற்றுத் தரப் பதவிகளில் கடமை மேவுகையாற்றுவதற்காக வேறு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் மூலம் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட ஆபரணக் கைத்தொழில் அபிவிருத்தி, மேம்பாட்டு மற்றும் ஒழுங்குமுறைதொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆபரணக் கைத்தொழில் ஒழுங்குமுறைக்காக ஆபரணக் கைத்தொழிலாளர்களைப் பதிவு செய்தல், பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளிற்காக அதிகாரசபையின் தலையீடு மிகுவும் குறைந்த நிலையில் காணப்பட்டது.

(ii) அக் கைத்தொழிலாளர்களிடம் இருந்து ரூபா 5,000 தொகையான வருடாந்தப் பதிவுக் கட்டணம் அறவிடப்பட்டு 2008 ஆம் ஆண்டின் போது ஆபரண அபிவிருத்தி நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிராததுடன் நிதிய நோக்கங்கள் உறுதியாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iii) கைத்தொழில் அபிவிருத்திக்காக அந் நிதியைப் பயன்படுத்துவதற்கு குறித்த திட்டம் ஒன்றோ முறைமையோ இல்லாதிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 72,131,745 தொகையான மீதி விளைவற்றுக் காணப்பட்டது.

(iv) 2017 ஆம் 2018 ஆம் ஆண்டுகளின் போது நிதியத்தைப் பயன்படுத்தி ரூபா 4,213,289 தொகையான உபகரணங்களும் சொத்துக்களும் ஆபரணச் சங்கத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், அவை குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் உபகரணங்கள் வழங்கப்பட்ட நோக்கு எய்தப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதியத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அன்பளிப்புகளில் இருந்து கைத்தொழிலிற்கான பங்களிப்பு குறைவான நிலையில் காணப்பட்டது.

(இ) நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான உடவலவ கரையோர மீன் விருத்தி நிலையத்தின் கோரிக்கைகள் அகற்றப்படுவதற்காக அவ் அதிகாரசபையும்

தேசிய இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபைக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கைக்கு முரணாகவும் நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபையினதும் மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் இன்றி அதிகாரசபையால் தொழில் முயற்சியாளர் ஒருவருடன் ஏற்படுத்தப்பட்ட ஓர் உடன்படிக்கையில் அந் நிலத்தை அகழ்ந்து இரத்தினக்கல் அகழ்வுச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. சேயற்திட்டத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற இரத்தினக்கல் வகைகள் மற்றும் அளவுகள் தொடர்பாக அகழ்வின் போது வைக்கப்பட்டிருந்த பதிவுகளுக்கும் இரத்தினக்கல் மதிப்பீட்டின் போது வைக்கப்பட்டிருந்த பதிவுகளுக்கும் இடையே பாரிய முரண்கள் நிலவியதுடன் மதிப்பீட்டுக் குழுவால் அகற்றப்பட்டிருந்த கிராத் 88.65 ஆன இரத்தினக்கற்களின் வகை, துண்டுகள் அகற்றப்பட்ட விதம், அகற்றப்பட்டமைக்கான காரணங்கள் மற்றும் அங்கீகாரம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) களுகங்கை ஹெரதியாவக இரத்தினக்கல் அகழ்வுச் செயற்திட்டத்திற்காக ரூபா 12.5 மில்லியன் தொகைக்கு தொழில் முயற்சியாளர் ஒருவர் 2017 ஆகஸ்ட் 11 ஆம் திகதி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த போதிலும் அவ் இடத்தில் இரத்தினக்கல் அகழ்விற்காக சுற்றாடல் அங்கீகாரமும் ஏனைய அரச நிறுவகத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளத் தவறியதன் காரணமாக செயற்திட்டக் கணக்காய்வுத் தினம் வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) களனி கங்கைக்கு அருகாமையில் அதிகாரசபையால் செயற்படுத்தப்படும் ஹத்துவவத்த இரத்தினக்கல் அகழ்வுச் செயற்திட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபை,நீரியல் வளத் திணைக்களம் மற்றும் குறித்த பிரதேச செயலாளர்களின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் காரணமாக கங்கைக்கரை பாரிய அளவில் அரிப்பிற்கு உட்டிட்டிருந்த போதிலும் அவற்றை வழமைக்குக் கொண்டுவருவதற்காக செயற்திட்டத்தைச் செயற்படுத்தும் தொழில்முயற்சியாளரிடம் இருந்து பிணைத்தொகை பெறப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற இரத்தினக்கல் மீளாய்வாண்டின் போது 4 சந்தர்ப்பங்களில் ஏலவிற்பனை செய்யப்படுவதற்காக மதிப்பிடப்படுகையில் நிறை கிராத் 1,858.65 அளவிலான இரத்தினக்கற்கள் பெறுமதி அற்ற இரத்தனக்கற்களாகக் குறிப்பிடப்பட்டு அகற்றப்பட்டிருந்ததுடன் அக் கல் வகைகள், துகள்களின் அளவு, அகற்றப்படுவதற்கான காரணம் மற்றும் அகற்றப்பட்ட விதம் மற்றும் அங்கீகாரம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அதிகாரசபையின் ஏற்றுமதி விற்பனை மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான மேம்பாட்டுத் திட்டத்தின் படிரூபா 28,000,000 தொகை செலவில் நடாத்தப்படத் திட்டமிடப்பட்டிருந்த 3 தேசியக் கண்காட்சிகளும் 3 வெளிநாட்டுக் கண்காட்சிகளும் நடாத்தப்பட்டிராததுடன் ரூபா 3,690,000 செலவில் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராத 3 வெளிநாட்டுக் கண்காட்சிகள் நடாத்தப்பட்டிருந்தன. வெளிநாட்டுக் கண்காட்சிகளுக்காக ஏற்றுமதியாளர்களைப் பங்கேற்கச் செய்வதற்காகவும் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்காகவும் போதியளவு ஒழுங்குகள் இல்லாததன் காரணமாக 2 கண்காட்சிகளுக்கு உரித்தான ரூபா 2,815,000 தொகையான மொத்தச் செலவினமும் 4

ஏற்றுமதியாளர்களால் வழங்கப்பட வேண்டிய ரூபா 3,426,163 தொகையான பங்களிப்பு அதிகாரசபையால் ஏற்கப்பட்டிருந்தது.

(எ) செயற்பாட்டுத் திட்டம் மற்றும் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அதிகாரசபையின் முக்கிய நோக்கான தங்க இறக்குமதியாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், இலங்கை இரத்தினக்கல், ஆபரணங்கள் பரிமாற்றத்திற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து மேம்படுத்தல், ரத்னதீப விற்பனைக் கூடங்களைச் செயற்படுத்தி முகாமைத்துவம் செய்தல் போன்ற பணிகளை மீளாய்வாண்டின் போது செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்கும் அதன் நோக்கங்களை எய்துவதற்காக செயற்பட்டிருக்கவில்லை.

(ii) ஆண்டின் போது மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சிகளை நடாத்தல், இரத்தினக்கல், ஆபரணங்களை மேம்படுத்தி மீள் ஏற்றுமதியின் கீழ் வெளிநாடுகளைத் தொடர்புபடுத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய 5 செயற்பாடுகள், இரத்தினக்கல் சந்தை ஒன்றை ஸ்தாபித்தல், தலைமைக் காரியாலயத்தில் உள்ள ஆய்வுகூடத்தை மேம்படுத்தல், கண்டியில் 2 புதிய ஆய்வுகூடங்களைஸ்தாபித்தல், அதிகாரசபைக்காக ISO தரச்சான்றிதழையும், ஆபரண மதிப்பீட்டுப் பிரிவிற்காக சர்வதேச அங்கத்துவத்தையும் சர்வதேசத் தரச்சான்றிதழையும் பெற்றுக்கொண்டு, இரத்தினக்கல்,ஆபரணங்களுக்காக இணையதள ஏலவிற்பனை முறையை அறிமுகப்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்காக ரூபா 326,938,000 தொகையான ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அச் செயற்பாடுகள் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம், இரத்தினக்கல், ஆபரணக் கைத்தொழில் துறையில் ஈடுபடும் கைத்தொழிலாளர்களைப் பாராட்டு முகமாக ரூபா 10,000,000 ஏற்பாடு செய்யப்பட்டு செயற்பாட்டுத்திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அது பயன்படுத்தப்படாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் இன்றி கைத்தொழிலில் ஈடுபடும் தொழில்முயற்சியாளர்களிடம் இருந்து ரூபா 15,850,000 தொகையான பங்களிப்புத் தொகையைப் பெற்று அதிகாரசபையின் ரஜத ஜயந்தி விழாவுடன் கைத்தொழிலாளர்களை கௌரவிக்கும் பரிசளிப்பு விழா ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. விழா 2018 நவம்பர் 23 ஆம் திகதி நடாத்தப்பட்டிருந்த பொதிலும், குறித்த பணிப்பாளர் சபைப் பத்திரத்திற்காக 2018 திசெம்பர் 14 ஆம் திகதி மேவுகை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ரஜத ஜயந்தி பரிசளிப்பு விழாவிற்கான சகல பொருட்கள் மற்றும் சேவைகளினதும் கொள்வனவுகள் கொள்வனவு நடைமுறைவழிகாட்டலின் 3.4(ஆ) இற்கு முரணாக சந்தை விலையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பரிசளிப்பு விழாவிற்காக தேவைக்கு அதிகமான அளவில் 21 வெற்றிக்கோப்பைகள் தயாரிக்கப்பட்டு இதில் 183,600 தொகையான 17 கோப்பைகள் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஐ) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 8,950.000இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஓர் மோட்டார் வாகனம் 2017 திசெம்பர் வரையிலும், 105,502 கி.மீ. அளவில் ஓடப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. வாகனம் பயன்படுத்தப்பட்ட 6 ஆண்டுகளில் ரூபா 4,542,832 தொகை செலவிடப்பட்டு 55 திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஒ) கட்டுநாயக்க விமானநிலையத்தின் வெளிச்செல்லும் பகுதியில் உள்ள ஏற்றுமதி சேவைகள் நிலையத்தில் ஏற்றுமதி செய்யப்படும் இரத்தினக்கல், ஆபரணங்கள் பொதியிடப்பட்டு முத்திரைபொறிக்கப்படுவதற்காக ரூபா 1,242,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 10,000 பொலிதீன் பைகளில் 9,740 மற்றும் 40,000 பாதுகாப்புப் பட்டிகளில் 39,740 பட்டிகள் ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டிருந்ததுடன் ஏற்றுமதி நிலையம் மூடப்பட்டிருந்தது.

(ஓ) ரூபா 13.6 மில்லியனிற்கும் மேலான தொகை செலவிடப்பட்டு 2017 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்த நடமாடும் ஆய்வுகூடம் ஒன்று 2018 சனவரி மாதம் முதல் ஒக்டோபர் வரையான 10 மாத காலமாக 425 சான்றிதழ்களை வழங்கி ரூபா 380,180 தொகையை உழைத்திருந்தது. இதற்கு உரித்தான நேரடிச் செலவினமான ரூபா 641,352 தொகையும் பெறுமானத்தேய்வு ரூபா 2,844,609 தொகையானமையால் மொத்தப் பற்றாக்குறை ரூபா 3,105,823 ஆகக் காணப்பட்டது. இந் நடமாடும் ஆய்வுகூடத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 99,395 தொகையான கணனியும் ரூபா 7,794,888 தொகையான 2 Energy Dispersive X ray Fluorescence Spectrometer உபகரணங்கள் 2 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(ஔ) அதிகாரசபைக்கு உரித்தான மாத்தறை பெலிதெனியவில் உள்ள ரூபா 889,000 பெறுமதியான 80 பேர்ச் காணி ஒன்றும் அங்குள்ள பதிவளிக்கப்பட்ட பெறுமதி ரூபா 3,091,861 தொகையான 3,007 சதுர அடி அளவிலான கட்டிடம் ஒன்றும் 2012 ஆம் ஆண்டு முதல் 7 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(க) இரத்தினபுரி பிரதேச அலுவலகத்தில் ஸ்தாபிக்கப்படுவதற்காகத் தீர்மானிக்கப்பட்டிருந்த நூதனசாலைக்காக 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,251,498 தொகையான சொத்துக்கள் 2 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் கணக்காய்வுத் தினம் வரையிலும் நூதனசாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) அதிகாரசபையின் சட்டப் பிரிவின் 5 சட்டத்தரணிகள் கடமையாற்றி வருவதுடன் பல்வேறு தரப்பினரால் அதிகாரசபைக்கு எதிராகத் தொடரப்பட்டிருந்த 30 வழக்குகளில் 26 வழக்குகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 859,114 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(கி) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு "நிகழ்ச்சி நிரலின்" படி ஒவ்வொரு அரச நிறுவகமும் செயற்பட வேண்டியதுடன்

அதிகாரசபையால் தமது விடயப்பொறுப்பிற்கு உட்படும் செயற்பாடுகள் தொடர்பாக அறிந்திருந்த போதிலும் இதற்கு உரித்தான எந்த ஒரு செயற்பாடும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி